# <u>பத்திரிக்கை செய்தி</u>

## எம்.இ.டி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற கணினி வன்பொருள் மற்றும் வலை அமைப்பு பயிலரங்கம்

கன்னியாகுமாரி மாவட்டம் , செண்பகராமன்புதூர் எம்.இ .டி பொறியியல் கல்லூரி கணிப்பொறி துறையின் சார்பில் கணினி வன் பொருள் மற்றும் வலை அமைப்பு குறித்த பயிலரங்கம் நடைப்பெற்றது

எம்.இ.டி பொறியியல் கல்லூரி தாளாளர் P.முகம்மது எக்கீம், மேனேஜிங் ட்ரஸ்ட்டி திருமதி. லைலா எக்கீம் ஆகியோர்களின்.அறிவுறுத்தலின் படி கல்லூரி முதல்வர் டாக்டர். P.செந்தில் குமார், துணை முதல்வர் திரு.R ஆறுமுகம் ஆகியோரது மேற்பார்வையில் நடைபெற்ற கணினி வன்பொருள் மற்றும் வலை அமைப்புக்கான பயிலரங்கம், கணினித்துறை மாணவர்களுக்கு பயிலரங்கத்தில் முதல் பகுதியாக திரு.தினேஷ் கணினியின் வன்பொருள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். அதனை தொடர்ந்து திரு. முத்துராம் அவர்கள் வலை அமைப்பு டெக்னோலஜி மற்றும் அதன் வேலை வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்குப்பயன் பெரும் வகையில் எடுத்துரைத்தார். பயிலரங்கத்தின் இரண்டாம் பகுதியாக திரு. செந்தில் குமார் மற்றும் திரு. முத்துராம் இருவரும் இணைந்து கணினி வபொருள் மற்றும் வலை அமைப்பு செயல்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு பயன் பெரும் வகையில் விளக்கி கூறினார்கள் பயிரங்கத்தின் இறுதியில் பங்கேற்ற மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் செந்தில் குமார் அவர்கள் சான்றிதழ்களை வழங்கினார் பயிலரங்கத்திற்கான ஏற்பாடுகளை கணினித்துறைத்தலைவர் திரு.ஜெயராம், கணினித்துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவ,மாணவிகள் செய்திருந்தனர்.